
# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் –18

# கிறிஸ்துவின் சரீரமான சபை


## பாகம்-2



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# கிறிஸ்துவின் சரீரமான சபை பாகம்-2



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் இயேசு கிறிஸ்துவின் சபை பற்றின பாடத்தின் இரண்டாம் பாகத்தினைப் பார்ப்போம். கிறிஸ்துவின் சபையில் மூன்று படிகள் உள்ளதை கடந்த வகுப்பில் ஆராய்ந்தோம். அதாவது **1) அழைக்கப்பட்டவர்கள் 2) தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் 3) உண்மையுள்ளவர்கள் ஆவர்(வெளிப்படுத்தல் 17:14)**. இது கிறிஸ்தவ ஜீவியத்தில் கிறிஸ்துவோடு மகிமையடையும் மூன்று வளர்ச்சி நிலைகளாகும்.

இதில் அழைக்கப்பட்டவர்கள் யாரெனில், கிறிஸ்தவர் பிரிவுகளில் உள்ள எல்லா விசுவாசிகளும் அடங்குவர். இயேசுவின்மேல் விசுவாசம், அவருடைய இரத்தத்தின்மேல் விசுவாசம், மற்றும் அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள். இவர்கள் தேவ வார்த்தைகளைப் பற்றிய ஞானத்தில் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள். ஆனாலும் இவர்களுடைய விசுவாசமானது நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் நிறுத்துகிறது **(ரோமர் 5:1, 1பேது2:2)**. ஆனால் விசுவாசம் மட்டும் போதுமானதாக இல்லாமல், **'கிரியை"** அவசியமானதாக உள்ளது.

**யாக்கோபு 2:17**

**'கிரியையற்ற விசுவாசம் செத்ததாயிருக்கிறது"**

கிரியை எனும்போது, கர்த்தர் இயேசுவின் வார்த்தைகளை கவனிக்கவேண்டும். ஆனால் அநேகர் பள்ளிகள், மடங்கள், மருத்துவமனைகள் நடத்துவது போன்ற சமூகசேவைகள், கிறிஸ்துவுக்காக செய்யும் சேவை என்று நினைக்கின்றனர். ஆனால் கிறிஸ்து எதிர்பார்க்கும் கிரியைகள் இவைகளல்ல.

**யோவான் 6:29**

**'இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக-**
**அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே**
**தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்"**

இங்கு குறிப்பிட்ட கிரியைகள் என்பது, இயேசுவின்மேல் உள்ள விசுவாசம் ஆழமான நம்பிக்கையாக மாறியுள்ளதைக் குறிக்கும். ஆண்டவரின் கற்பனைக்கு முழுமையாக கீழ்ப்படிந்து, அவருக்கேற்ற சீஷர்களாக வாழ்வதைக் குறிக்கிறது.



**யோவான் 8:31**

**'இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களைநோக்கி - நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்"**

மேலும் நம் கர்த்தர் நமக்குக் கொடுத்த கற்பனைகள் என்ன? இதைக் குறித்து நாம் வாசிக்கையில்



**மத்தேயு 16:24**

**'ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், தன்னைத்தான் வெறுத்து சிலுவையை எடுத்து பின்பற்றவேண்டும்"**

**1பேதுரு 2:21**

**'இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்"**

ஆம். பெரும்பான்மையான விசுவாசிகளுக்கு மத்தியில், கர்த்தரின் முன் உதாரணத்தைப் பின்பற்றக்கூடிய பொன்னான வாய்ப்பை வெகுசிலரே கண்டுணர முடிகிறது. ஆகவே

**மத்தேயு 22:14**

**'அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலா**

என்று பார்க்கிறோம். விசுவாசிகள் அநேகரில் சிலர் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிலைக்கு தங்களை உயர்த்தவேண்டும்.

**சங்கீதம் 25:14**

**'கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர் தம்முடைய உடன்படிக்கையை அவர்களுக்குத் தெரியப்படுத்துவார்"**

இந்த உடன்படிக்கையானது இயேசு தம் சுய சித்தத்தைப் பிதாவின் சித்தம்

செய்வதற்காக பலிசெலுத்தினதைக் குறிக்கிறது **(எபி 10:7)**.

**சங்கீதம் 50:5**

**'பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை கூட்டுங்கள் என்பார்".**



இந்தவொரு உடன்படிக்கையானது ஞானஸ்நானம் என்ற அருமையான அடையாளத்தினால் காண்பிக்கப்பட்டதை நாம் பார்த்தோம்.

அதாவது **ரோமர் 12:1,2** ன்படி, ஞானஸ்நானத்திலிருந்து தங்களது ஜீவனையே அல்லது இவ்வுலக வாழ்க்கையையே கர்த்தருக்கென்று தியாகம் செய்வதைக் குறிக்கிறது. இதுவே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிலை. இந்த புதிய சிருஷ்டிகள் யாரைக் குறிக்கிறார்கள் என்று கீழ்வரும் வசனம் கூறுகிறது :

**2கொரிந்தியர்5:17**

**'ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின"**

தன்னை ஒப்புக்கொடுத்து, உடன்படிக்கை பண்ணின நிலையில் ஒருவர் புதிய ஆவியின் சிந்தையைப் பெற்றுக்கொள்வதை இது குறிக்கிறது. இவ்விதமாக இவர்களுக்கு 'எல்லாம்" புதியவைகளாயின. இந்த புதிய சிந்தையைக் குறித்து வாசிக்கையில்,

**கொலோசெயர் 3:10**

**' தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே"**

அதாவது இந்நிலைக்கு வந்தவர்கள் தங்களுடைய எண்ணம், நோக்கம், சிந்தை, ஆசை அனைத்துமே இதுமுதல் பூமிக்கடுத்தவைகளாயிராமல், பரத்துக்கடுத்தவைகளாயிருக்கிறது. இவர்களே வேதத்தில் பரிசுத்தவான்கள் என்றழைக்கப்படுகின்றனர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களிலும் இரு வகுப்பார் உள்ளனர். இவ்விஷயம் நமக்கு மிகுந்த ஆச்சரியமளிக்கக்கூடியதாக இருக்கும்

**எபிரேயர் 3:1**

**'இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே"**

இவர்களே பரலோக அழைப்புக்குத் தகுதியானவர்கள்.

**பிலிப்பியர் 3:14**

**‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்கிறேன்”**

எனும்போது, இது ஒரு பரலோக வாய்ப்புக்கான ஒரு அழைப்பாகும்.

ஆனால் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அல்லது விசுவாசிகள் அனைவரும் பரலோகம் செல்வது உண்மையா?

**யோவான் 3:3**

**கர்த்தர்கூறும்போது, ‘ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்”.**

இங்கு பரலோகம் செல்லவேண்டுமெனில் ஒருவன் மறுபடியும் பிறக்கவேண்டும் - இதன் பொருள் என்ன? வசனம் 4ல், நிக்கோதேமு கர்த்தரிடம்,’மறுபடியும் பிறத்தல்” என்பது மறுபடியும் தாயின் வயிற்றில் சென்று பிறப்பதைக் குறிக்கிறதா? என்கிறார்.

**‘பிறத்தல்** என்பதற்கு கிரேக்கபாஷையில், **‘ஜெனோ”** ‘GENNAO’ (Strongs concordance No:1080). பிறத்தல் (Born) என்பதற்கும், மற்றும் கருத்தரித்தல் அல்லது ‘உற்பத்தியாதல் (To Beget)” என்பதற்கும் கிரேக்கமொழியில் ஒரே வார்த்தை தான் பயன்படுத்தப்படுகிறது.

**A study of the Greek word *gennao* (Strong’s 1080).**

**Strong’s *Exhaustive Concordance: Greek Dictionary of the New Testament*:**

“1080. **gennao** ... to *procreate* (properly of the father, but by extension of the mother); figuratively to *regenerate*: —bear, beget(கருத்தரித்தல்) be born (பிறத்தல்)bring forth, conceive, be delivered of, gender, make, spring.”



ஆக, ஒரு குழந்தை தாயின் வயிற்றில் உருவாகி (Gennao),9 மாதங்களுக்கு பின் பிறப்பது (Gennao) போன்ற ஒரு முறையே ஒரு மனிதன் பரலோகம் செல்வதற்கு ஒப்புமையாக கர்த்தர் பேசியிருப்பது தெளிவாகிறது. எவ்வாறு பிறப்பது என்றால்,

**யோவான் 3:5**

**’ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான்”**

என்று பார்க்கிறோம். இதுபற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக அறியலாம். ஆனால் இங்கு பரலோகத்தில் பிறப்பது குறித்து பேசியிருப்பதைப் பற்றி தெரிந்துகொள்ளலாம்.

எவ்வாறெனில், முதலாவது ஜலத்தினால் பிறக்கவேண்டும். இது கருத்தரித்தலுக்கு சமம். ஜலத்தினால் என்பது தண்ணீரில் மூழ்கும் ஞானஸ்நானத்தையே அடையாளமாகக் குறிக்கிறது. பலியினாலே உடன்படிக்கை செய்வதை இதன்மூலம் காண்பிக்கப்படுகிறது. **எபேசி 4:5ல்,'ஒரே ஞானஸ்நானம்"** . இது பற்றி முழுமையாக அறியாமல் இன்று விசுவாசிகள் எடுத்துக்கொள்ளும் ஞானஸ்நானம் கர்த்தரோடு செய்யப்படும் 'ஒரே ஞானஸ்நானத்தைக்" குறிக்காமல், வெறும் ஸ்நானத்தையே குறிக்கும். விசுவாசிகள் மரித்தபின் உயிரடையும்போது, பூமியில் மனிதர்களாக பொதுவான உயிர்த்தெழுதலை அடைவர். மேலும் பரலோக அழைப்பிற்குள்ளாக வருபவர்கள் அவர்களுக்கு கிடைக்கப்பெறும் பரிசு யாதெனில்,

**ரோமர் 2:7**

**'சோர்ந்து போகாமல் நற்கிரியை செய்து கனத்தையும் மகிமையையும் அழியாமையையும் தேடுபவர்களுக்கு நித்திய ஜீவளை அளிப்பார்".**

ஆக இவர்களுக்கு அழியாமையே பரிசாகும். அழியாமை என்றால் என்ன?

**2பேது1:4**

**'இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்வியசுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது**

அழியாமை என்றால் திவ்விய சுபாவமாகும். அதாவது பிதாவாகிய தேவனுடைய சுபாவமாகும். இந்த சுபாவத்தைக்குறித்து

**1தீமோத்தேயு 6:16**

**'ஒருவராய் சாகாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்.."**

பின்னாளில் இந்த நிலையை தேவன் இயேசுவின் கல்வாரி மரணத்திற்குப் பின்பு அவருக்கு அருளினதாக நாம் வாசிக்கிறோம் .

**வெளிப்படுத்தல் 1:18 / யோவான் 5:26**

**'மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை**

**உடையவராயிருக்கிறேன்”**

**‘ஏனெனில் பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படிக்கு அருள் செய்திருக்கிறார்”**

இந்த நிலையில் உள்ளவர்கள் ஜீவனுக்கான அடிப்படைத் தேவைகளாகிய காற்று, உணவு, தண்ணீர் போன்ற எதையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த ஜீவன் அவர்களுக்குள்ளாக உருவாக்கப்பட்டு, பூரணமடைந்திருக்கிறது- **’தன்னில் தானே ஜீவன்”**

இந்த ஒரு சுபாவம் பெற்றுக்கொள்ளவே சபைக்கு இந்த மேலான பரம அழைப்பு அருளப்பட்டிருக்கிறது.

**2தீமோத்தேயு 2:11-12**

**‘அவரோடுகூட பாடுகளை சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்“**

எனும்போது இந்த திவ்விய சுபாவத்தோடு இயேசுவுடன் இராஜாக்களாக ஆளுகை செய்யும் வாய்ப்பு நமக்கு அருளப்பட்டிருக்கிறது. இயேசு தாமே இதை வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதைக் குறித்து நாம் வாசிக்கலாம்.

**வெளிப்படுத்தல் 3:21**

**‘நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்”**

மற்றும் தானியேல் தீர்க்கதரிசன புஸ்தகத்தில்,

**தானியேல் 7:27**

**‘வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம். சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்”.**

இதனிமித்தம் இயேசுவும் - இராஜாதிஇராஜா என்று அழைக்கப்படுகிறார். இப்பேர்ப்பட்ட வாக்குக்கடங்காத மிகப்பெரிதான பரிசு இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்கும் உண்மையுள்ளவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி அநேகரால் தெரிந்து கொள்ளமுடிவதில்லை என்று கீழ்க்காணும் வசனம் கூறுகின்றது

**1கொரிந்தியர் 2:9**

**'தேவன் தம்மில் அன்புகூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவும் இல்லை, மனுஷருடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை"**

ஆகவே தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு இந்த ஒரு பந்தயப் பொருளைப்பெற பந்தயசாலையில் ஓடுபவர்களுக்கு ஒப்பானதாக உள்ளது.

**பிலிப் 3:13,14**

**- அப்.பவுல், 'பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்"** என்கிறார்.

**1கொரிந்தியர் 9:25-26**

**'நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்"**

அதாவது ஞானஸ்நானத்தின்மூலம் செய்துகொண்ட உடன்படிக்கையை உண்மையாக கடைசிவரை நிறைவேற்றவேண்டும்.

இப்போது உடன்படிக்கை செய்தவர்களில் இரு பிரிவினரைப் பற்றி பார்க்கலாம்.

மேற்சொன்ன பந்தயத்தில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களிலும் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்கள் சிலரே அம்மேலான பரிசை வெல்வர்- **வெளிப்படுத்தல் 17:14.** இவர்களே சபையின் மூன்றாவது படியை வெற்றிகரமாகக் கடந்தவர்கள்.

**மத்தேயு 24:13**

**'முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்"**

இவர்களைப்பற்றி கர்த்தர் **லூக்கா 12:32**

**'பயப்படாதே சிறுமந்தையே இராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்"**

இவர்களுடைய தெரிந்தெடுத்தல் 2000 வருடகாலமாக கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் நடைபெற்று வருகிறது. எவ்வளவுபேர் என்று வேதத்தில் உள்ளது என்றால், வெளிப்படுத்தல் 14:1ல் 1,44,000 பேர் என்று கூறப்பட்டுள்ளது. இவர்களே மகிமையான சபை. **வெளிப்படுத்தல் 7:4-8** ஆகிய இவ்விரு வசனங்களில் மட்டுமே இந்த எண் தரப்பட்டுள்ளது. இந்த எண் பற்றி அடுத்த பாடத்தில் விரிவாக ஆராயலாம்.

**வெளிப்படுத்தல் 14:4**


**'ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்தாதவர்கள் இவர்களே. கற்புள்ளவர்கள்**

**இவர்களே. ஆட்டுக்குட்டியானவர் எங்கே சென்றாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே”**

இங்கு கூறப்பட்ட ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்தாதவர்கள் இவர்களே என்பது பற்றி பின்பு ஆராயலாம். இவர்கள் கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்து அதாவது கர்த்தரின் சித்தத்திற்காக உபத்திரவம், துன்பம் இழப்பு, அவமானம், மரணபரியந்தம் தங்கள் ஜீவனையே அர்ப்பணம்செய்து, கர்த்தராகிய இயேசுவின் சாயலை(குணநலன்களை) அடைவர்- **ரோமர் 8:29**. இவர்களே தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் - **யாக்கோபு 1:18**

இவர்களே உண்மையுள்ளவர்களாவார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் சிலர் கடைசிவரை கர்த்தர் இயேசுவின் வழி நடக்காமல் , தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிலையிலேயே இருந்துவிடுகின்றனர். அதாவது தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையை கடைசிவரை உண்மையாக நிறைவேற்றாதவர்கள்.


**வெளிப்படுத்தல் 7:9**



**‘இவைகளுக்குப் பின்பு நான் பார்த்தபோது, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளானகூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளை தரித்து தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்குமுன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்”.**

இவர்கள்கூட பரலோக வகுப்பார் ஆனால் சிறுமந்தைபோல சிங்காசனத்தில் உட்காராமல் அதற்கு முன்பாக நிற்கிறதைக் காணலாம். ஆட்டுக்குட்டியானவரோடுகூட இல்லாமல் அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். மேலும் தலையில் கிரீடம் வைக்காமல் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துள்ளார்கள். இவர்களே தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார்ஆவர். இவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு உட்பட்டவர்கள் அல்ல. இவர்கள் திரள் கூட்டத்தார் என்று காண்கிறோம். கர்த்தர் இயேசு தமது உவமையில் இவர்களை புத்தியில்லாத கன்னிகைகள்என்று கூறுகிறார் ( **மத்தேயு 25:1-13** ). இவ்வுவமையில் முதல் இரண்டு வசனங்களை வாசிக்கலாம் -

**மத்தேயு25:1-2**



**'பரலோக இராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாய் இருந்தார்கள்".**

இங்கு 'புத்தியுள்ள கன்னிகைகள் எனப்படுவோர், சிறுமந்தையை நோக்கி வளரும் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறார்கள். அதே சமயம் 'புத்தியில்லாத கன்னிகைகள் எனப்படுவோர் குறைவான வளர்ச்சியை காண்பிக்கும் கிறிஸ்தவர்கள் ஆவர். இதற்கான காரணங்கள் என்ன என்று காண்போம். இந்த இரு வகுப்பாரும் '**தீவட்டிகளை**" கொண்டுள்ளனர். இந்த **தீவட்டிகள்** எதை அடையாளப்படுத்துகிறது?

**சங்கீதம் 119:105**

**'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"**

தீவட்டிகள் என்பது தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தைக் குறிக்கிறது. இந்த தீவட்டியாகிய வேதாகமத்தை அனைவரும் பெற்றிருக்கின்றனர். பின்பு நாம் வாசிக்கிறோம்,

**மத்தேயு 25:3,4**

**'புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள். எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்"**

புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெயை எடுத்துச் செல்லவில்லை என்று நாம் காண்கிறோம். இந்த எண்ணெய் என்பது பரிசுத்தஆவியைக் குறிக்கிறது. இதனை பின்வரும் வசனத்தில் வாசித்து அறியலாம் .

**சங்கீதம் 133:2**

**'அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்.."**

அபிஷேக தைலம் (எண்ணெய்) என்பது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது.

ஆகவே எண்ணெய் என்பது பரிசுத்தஆவிக்கு அடையாளமாகும். அடுத்து, பாத்திரங்கள் என்பது எதைக் குறிக்கின்றது? இது பற்றி நாம் வாசிக்கையில்,

**2கொரிந்தியர் 4:7**

**‘.. இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்”**

இது மனித சரீரத்தையும் இருதயத்தையும் குறிக்கும். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பரிசுத்தஆவியைப் பெற்றிருந்து, அதை வெளிப்படுத்துபவர்களாக இருக்கவேண்டும்.
இந்த நிலைமையானது, தேவனுடைய வார்த்தையை கேட்பதோடு நில்லாமல், அதைப் பின்பற்றுவதால் பெறப்படுவதாகும்.
அடுத்ததாக, தீவட்டியிலிருந்து வரும் ‘ஒளி” எதைக் குறிக்கும்?

**சங்கீதம் 119:105**

**‘உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது”**

மேலும் தேவனுடைய வார்த்தையைக்குறித்து வாசிக்கையில்,

**யோவான் 17:17**

**‘..உமது வசனமே சத்தியம்”**

தீ வட்டியானது எண்ணெய் இருக்கும்வரை வெளிச்சம் தருவதுபோல் , வேதாகமமும் ஒருவர் பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கும்வரை சத்திய வெளிச்சத்தைத் தருகிறது(யோவான் 16:13) பரிசுத்தஆவி(எண்ணெய்)இல்லாமல், வேதாகமம் (தீவட்டி) சத்தியம் (வெளிச்சம்) தருவதில்லை. இதனை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம்.



ஒருவர் பாதி தண்ணீர் நிரம்பின கண்ணாடி குடுவையை கையில் வைத்திருக்கும்போது நாம் என்ன சொல்கிறோம்?

இந்த கண்ணாடி குடுவை பாதிதண்ணீரால் நிறைந்துள்ளது என்று தானே நாம் பதில்சொல்வோம்? இந்நிலையில் மறு பாதி குடுவையில் என்ன இருக்கிறது என்றுகேட்டால், அது வெற்றிடமாக இருக்கிறது என்று சொல்லுவோம். ஆனால் இது உண்மை அல்ல. குடுவையானது பாதி தண்ணீராலும், மறுபாதி காற்றினாலும் நிறைந்துள்ளதே உண்மையாகும்.

***ஆம். அது வெற்றிடமாக இருக்க வாய்ப்பில்லை.
குடுவை - ஒன்று ஏதாவதொன்றால் நிறைந்திருக்கவேண்டும்
அல்லது சுற்றிலும் உள்ள காற்று குடுவையை நிரப்பியிருக்கவேண்டும்.***

இதுபோன்ற நிலைமையே இயேசுவைப் பின்பற்றும் கன்னிகளிடத்திலும் காணப்படுகிறது.

ஆம். புத்தியில்லாத கன்னிகைகள் தங்களுடைய 'பலியின் உடன்படிக்கையை" நிராகரித்து, தங்களுடைய பாத்திரத்தை(அவர்களுடைய வாழ்க்கை மற்றும் இருதயம்) 'உலகத்தின் ஆவியால் நிரப்பி" பரிசுத்தஆவிக்கு இடங்கொடுப்பதில்லை.

உலகத்தின் ஆவி என்றால் என்ன? இது பற்றி

**மத்தேயு 13:22**

**'முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும்,ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்"**

'உலகத்தின் ஆவி" என்பது உலக கவலைகளும் ஐசுவரியத்தின் மயக்கமுமாகும். இந்த ஆவி இன்று உலகம் முழுவதிலும் காணப்படுகிறது.

ஒருவர் இப்படிப்பட்ட உலகத்தின் ஆவியால் தன் பாத்திரமாகிய இருதயத்தையும் வாழ்க்கையையும் நிரப்பாமல் காத்துக்கொள்வதில் கவனமாய் இருத்தல்வேண்டும்.

ஏனென்றால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள், கர்த்தர் தம் வசனங்களில் ஏற்படுத்தியுள்ள வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்து நடக்கிறார்கள்.

**மத்தேயு 6:33**

**'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்"** மேலும்

**எபிரேயர் 13:5**

**'நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார்"**

ஆனால் புத்தியில்லாத கன்னிகைகள் இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசமற்றவர்களாக இருந்து, அதின்மூலம் தங்களுடைய நேரம், பெலம் மற்றும் சிந்தனை ஆகியவற்றை உலகக் காரியங்களில் செலுத்தி, 'உலகத்தின் ஆவியை" தங்களுடைய பாத்திரத்தில் நிரப்பி, கிறிஸ்தவ வளர்ச்சிக்கும், தங்களுடைய 'பலியின் உடன்படிக்கையை" நிறைவேற்றுவதற்கு குறைவான நேரம் மற்றும் சிந்தனையை ஒதுக்குகிறார்கள்.

ஆகவே, கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள், தங்களுடைய பாத்திரமாகிய ஜீவியம் எதனால் நிரப்பப்பட்டுள்ளது என்று கவனிப்பது அவர்களுக்கு அவசியமாகும்.

அது பரிசுத்தஆவியால் நிறைந்துள்ளதா.. அல்லது உலகத்தின் ஆவியால் நிறைந்துள்ளதா என்று கவனிக்கவேண்டும்.

இவ்விதமாக புத்தியில்லாத கன்னிகைகள் தங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிதான பரிசை தவறவிடுகிறார்கள்.

இதனால் ஒரு வகுப்பார் மாத்திரம் ஆட்டுக்குட்டியானவரோடு மகிமையடையும் சபையாக மாறுகிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரில் உள்ள இந்த இரண்டு பிரிவினர்களையும் பற்றி, லேவியராகமம் 16ம் அதிகாரத்தில், இஸ்ரயேலரின் பாவ நிவாரண நாளுக்குரிய பலிகளில் நிழலாக காண்பிக்கப்பட்டுள்ளனர். (இக்காரியங்களை வரும் வகுப்புக்களில் தியானிக்கஉள்ளோம்). இதைக் குறித்த வசனங்களை வாசிப்போம்.

**லேவியராகமம் 16:7,8**

**'அந்த இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக் கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அந்த இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களையுங் குறித்து கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும் போட்டு, கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரண பலியாகச் சேரப்பண்ணி..."**

இங்கு இரண்டு வெள்ளாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இவைகள் சற்று முன் நாம் படித்த, தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் உள்ள இரண்டு பிரிவினரை அடையாளப்படுத்துகிறது.

1. **கர்த்தருடைய ஆடு - சிறுமந்தையைக் குறிக்கிறது**
2. **போக்காடு - திரள்கூட்டத்தினரைக் குறிக்கிறது**

கர்த்தருடைய ஆடு சீட்டுப்போடுதல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவது தேவன் கிறிஸ்துவின் சபையை தேர்வுசெய்வதில் எந்தவித பாரபட்சமும் காண்பிப்பதில்லைஎன்பதைக்காண்பிக்கிறது

நியாயாதிபதிகள் 7:1-7 வசனங்களில் காண்பிக்கப்பட்டுள்ளபடி, கிதியோன்



மீதியோனியருக்கு விரோதமாக போர் செய்வதற்காக, போர் சேவகர்களைத் தெரிந்துகொள்ளுதலில், கிறிஸ்துவின் சபையின் மூன்று படிகள் நிழலாக விளக்கப்பட்டுள்ளதை வாசித்து அறியவும்.

போர் புரிவதற்காக முதலில் வந்தவர்கள் 32,000பேர். அதில் பயமும் திகிலும் கொண்டு திரும்பிச் சென்றவர்கள் 22,000பேர்.இவர்கள் கிறிஸ்துவின் சபையில் அழைக்கப்பட்டவர்கள் நிலைமையைக் குறிப்பவர்கள். மீதமுள்ள 10,000பேரில் தேவன் சொன்ன முறைமையின்படி தண்ணீரைக் குடிக்காதவர்கள் 9,700 பேர். இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் குறிக்கும் நிலை. மீதமுள்ள 300 பேர் மாத்திரமே தேவன் சொன்னபடி முழங்காற்படியிட்டு, கையால் தண்ணீரிலுள்ள அழுக்கை விலக்கிவிட்டு, சுத்தமான தண்ணீரைக் குடித்தவர்கள். இவர்களே உண்மையுள்ள சபையின் நிழலாக உள்ளனர். இதுபற்றி விளக்கமாக பின்னர் ஆராயலாம்.

இறுதியாக, இயேசுகிறிஸ்துவின் சபையில் நாம் காண்கிறது என்னவெனில்,

**'அழைக்கப்பட்டவர்கள்"** - விசுவாசிகள் அநேகர்

**'தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்"** - பின்பற்றுகிறவர்களாக மாறினவர்கள் சிலர்

**'உண்மையுள்ளவர்கள்"** - குமாரனுடைய சாயலான இறுதி இலக்கை அடைந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வெகுசிலரே.

**ரோமர் 8:29**

**'தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராய் இருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்"**



**தேவ கிருபை நம் அனைவரோடும்கூட இருப்பதாக, ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/